www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11Acc

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி

கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 50

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **10×1=10**

1) ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) பேரேடு

2) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்

3) ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹ 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹ 60,000 எனில் அந்நிறுவனத்தில் முதல் ..................
அ) ₹ 1,60,000 ஆ) ₹ 60,000 இ) ₹ 1,00,000 ஈ) ₹ 40,000

4) கு.ப.எ. என்பது
அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
இ) சான்றுச்சீட்டு எண் ஈ) ஆணை எண்

5) ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

6) இருப்பாய்வு என்பது ஒரு
அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு

7) உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்புக் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு

8) முன்கூட்டி செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

9) வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிகத் தனித்தன்மை கருத்து ஆ) நிறுவனத் தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

10) நிதித் தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

**II. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×2=10**
**(வினா எண் : 17 கட்டாயம்)**

11) கணக்கியலை வரையறு.
12) கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?
13) ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?
14) எடுத்தெழுதுதல் என்றால் என்ன?
15) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2016 | | | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| | 30 | அறைகலன் விற்றது | 400 |

16) கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம்பெறுமா (அ) வரவுப்பத்தியில் இடம்பெறுமா எனக் காட்டுக.
(அ) முதல் (ஆ) வெளித்தூக்குக்கூலி (இ) வாராக்கடன் (ஈ) தள்ளுபடி பெற்றது

17) குறிப்பேட்டுப் பதிவுகள் தருக:
i) வங்கியிலிருந்து கடன் பெற்றது ₹ 10,000
ii) கழிவு ரொக்கமாகப் பெற்றது ₹ 5,000

**III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×3=15**
**(வினா எண் : 24 கட்டாயம்)**

18) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
19) 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' - விவரி.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

V11Acc

20) பின்வருவனவற்றிற்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.
அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புக்கள் குறைதல்.
ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்.

21) கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.

22) **விடுபட்ட பகுதிகளை நிரப்புக:**

| | **சொத்துக்கள் (₹)** | = | **முதல் (₹)** | + | **பொறுப்புகள் (₹)** |
|---|---|---|---|---|---|
| அ) | 60,000 | = | ? | + | 25,000 |
| ஆ) | 40,000 | = | 30,000 | + | ? |
| இ) | ? | = | 30,000 | + | 25,000 |

23) இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

24) 2018 ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புக்கள் காணப்பட்டன.
**சொத்துக்கள்** : ரொக்கம் ₹ 40,000; சரக்கிருப்பு ₹ 50,000; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹ 20,000; இயந்திரம் ₹ 40,000.
**பொறுப்புகள்** : ஹரி என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹ 10,000.
தொடக்கப் பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×5=15**

25) அ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.

**(அல்லது)**

ஆ) சந்திரமோகன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,24,500 | கொள்முதல் | 40,000 |
| எடுப்புகள் | 2,000 | கட்டடம் | 1,10,000 |
| பெற்ற கடன் | 7,000 | மகிழ்வுந்து | 20,000 |
| விற்பனை | 53,400 | சரக்கிருப்பு | 16,200 |
| பொதுச் செலவுகள் | 2,500 | | |
| வங்கி மேல்வரைப்பற்று | 5,800 | | |

26) அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.
அ) முருகன் ₹ 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.
ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000.
இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000.
ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹ 5,000.
உ) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000.

27) அ) கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து அவற்றைக் கொண்டு ரொக்கக் கணக்கு மற்றும் விற்பனைக் கணக்கு ஆகியவற்றை தயாரிக்கவும்.

2017
அக். 10 சரக்குகள் விற்பனை செய்யப்பட்டு காசோலையும் பெறப்பட்டது. ஆனால் அதனை வங்கியில் செலுத்தவில்லை ₹ 30,000.
14 கோபி என்பவருக்கு கடனாக விற்ற சரக்கு ₹ 12,000
20 கோபியிடமிருந்து ரொக்கம் பெற்றது ₹ 12,000

**(அல்லது)**

ஆ) குறிப்பேட்டுப் பதிவினை தருக.

2019
மார்ச் 1 ராம் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 3,00,000
2 வங்கியில் பணம் செலுத்தியது ₹ 2,00,000
3 ஜெயா அறைகலன் விற்பனையகத்திடம் இருந்து ₹ 28,000 மதிப்புள்ள அறைகலன்கள் கடனுக்கு வாங்கப்பட்டது.
4 அந்தோணியிடமிருந்து ₹ 5,000 மதிப்புள்ள சரக்குகள் எடுப்பு அட்டை மூலமாக பணம் செலுத்தி வாங்கப்பட்டது.
5 சியாம் என்பவரிடம் இருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 50,000
6 ஜெயா அறைகலன் விற்பனையகத்திற்கு பணம் செலுத்தப்பட்டது.
10 உரிமையாளரின் மின்கட்டணம் செலுத்தியது ₹ 2,000
11 சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 800
12 மனோ என்பவருக்கு சரக்கு கடனுக்கு விற்றது ₹ 20,000
18 மனோ என்பவரால் சரக்கு திருப்பி அனுப்பப்பட்டது ₹ 5,000

----------